மயிலத்தில் ஐம்பெரும் விழா – பன்னாட்டுக் கருத்தரங்கம்

ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு நூல்

வள்ளுவ இலக்கணக் கண்ணாடியின் வழி கம்பனும் இளங்கோவும்

பதிப்பாசிரியர்கள்

பேராசிரியர் முனைவர் ச.திருநாவுக்கரசு,
முதல்வர், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரி,

பேராசிரியர் முனைவர் க.ஞானஜோதி சரவணன்
பொதுச் செயலாளர்,
கம்பன் கழகம் அறக்கட்டளை, திண்டிவனம்
Publisher & Chief editor Kamban Book of World Records

தொகுப்பாசிரியர்

முனைவர் அ.சதீஷ்
உதவிப் பேராசிரியர், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரி, மயிலம்

கேப்டன் புரவலர் முனைவர் பா.வேலம்மாள்
மேனாள் முதல்வர்,
அரசு கல்லூரி, கடைய நல்லூர்

வெளியீடு

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ், கலை, அறிவியல் கல்லூரி – மயிலம்
தென்காசி
கம்பன் கழகம் அறக்கட்டளை
எண்.27, ஜெயபுரம், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்

AIScanner

22. சிலம்பில் ஊழ் 133
- பாரதி பணிச் செல்வர் திருமதி.இரா.சரண்யா கோபால்

23. சிலம்பில் ஊழ் வினை - மஜோதி மீனாட்சி 138

24. சிலம்பில் ஊழ்வினை - இர.சீனிவாசன் 148

25. சிலம்பில் பயிரினங்கள் - முனைவர் நா. தீபாராணி 153

26. சிலம்பில் பிரிவாற்றாமை - பெ.சுவேதா 161

27. சிலம்பில் மகளிர் வாழ்வியல் முரண் 167
- முனைவர்.தே.தேன்மொழி

28. சிலம்பில் மானம் - செ.சௌமியா 181

29. சிலம்பில் வள்ளுவர் கண்ட மூவேந்தர் - வி.இளையபாரதி 186

30. சிலம்பில் வாழ்க்கை துணை நலம் 191
- திருக்குறள் கோ.சுமத்ராதேவி

31. சிலம்பில் விருந்தோம்பல் - முனைவர் கு.விஜயா 194

32. சிலம்பில் விருந்தோம்பல் - முனைவர் பா.சரளாதேவி 199

33. திருக்குறள் - சிலப்பதிகாரத்தில் வேட்டுவர் 204
- முனைவர்.செ.மார்கண்டன்

34. திருக்குறளில் தூதுரைப்பவரின் இயல்புகளும்
இராமாயணத்தில் அங்கதன் இயல்புகளும் 211
- க.கோபாலகிருஷ்ணன்

35. மகா கவி பாரதியாரின் உளவியல் சிந்தனைகள்,
அறிவியல் பார்வைகள், ஆன்மீக உணர்வுகள் 217
- யோகா.கே.கிருஷ்ணமூர்த்தி

36. ராமாயணத்திலும் ஒரு குசேலன் 223
- சித்தாந்த ரத்தினம் மு.சேது ஆண்டியப்பன்

37. வள்ளுவ இலக்கணக் கண்ணாடியின் வழியே இளங்கோவடிகள் 229
- முனைவர் நிமலன் மரகதவேல்

38. வள்ளுவம் வழி பண்பில் ஒளிரும் சிலம்பு 236
- முனைவர்.கே.கமலாமுருகன்

39. விருந்தோம்பல் - இளவள்ளுவ கம்பன் - மு.இளவழகன் 243

சிலம்பில் பயிரினங்கள்

முனைவர் நா. தீபாராணி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப மற்றும்
உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை.

முன்னுரை

சூழலியல் மண்டலத்தில் வாழ்கின்ற பல்லுயிரின வகைப்பாடு மிக முக்கியமானது. உலகில் வாழும் அனைத்து நுண்ணுயிர்கள் தாவரங்கள், விலங்குகள் அடங்கிய தொகுதியைப் பல்லுயிரின வகைப்பாடு (Bio&diversity) அறிஞர் வழங்குவர். இவ்வுயிர்கள் கட்புலனாகா இயற்கையிழைகளால் பிணைக்கப் பட்டுள்ளன. உயிரியக்கச் சுழற்சிக்கு இவை துணைபுரிகின்றன.பல்லுயிரின மண்டலத் தொகுதியின் செழுமை என்பது மனிதனுக்கும் இயற்கைக்குமான இணக்கமான உறவை புலப்படுத்துவதாகும். இந்நிலை மாற்றிச்சமயம்சார் அரசியல் ஏற்றப்பட்டுச் சிலப்பதிகாரத்தில் புனைவுருவாக்கம் செய்யப்பட்டுள்ள விதத்தை புலப்படுத்தி நிற்கிறது. அதே சமயம் சமூகச்சூழலில் பேரரசு உருவாக்கம் என்பது சூழலியல் மண்டலத்தொகுதியின் பீழை இதன்மூலம் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் தன்மை அறியமுடிகிறது. இதுபோன்று திருக்குறளிலும் சூழலியலின் தன்மையையும் உலகின் மேன்மையையும் வள்ளுவர் கூறி இருப்பதை நம்மால் காணமுடிகின்றது.

திருக்குறளில் 'உழவு' அதிகாரத்தில், எந்த வகையான தானியமாக இருந்தாலும் நிலத்தைப் பண்படுத்துவதே அதன் வெற்றி என வள்ளுவர் கூறுகிறார்:

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்" (குறள் 1037)

(அதாவது, ஒரு பலம் புழுதி கால் பலம் ஆகும் படி நிலத்தை நன்றாக உழுதால், ஒரு பிடி எரு கூட இடாமலே பயிர் செழித்து

...றது எனும் கருத்துரையைக் கதைத்திரியின் மூலம் கண்ணகி ...லைவளிடம் எடுத்துரைக்கிறார் நூலாசிரியர்.

"ஒழிகென வொழியா தூட்டும் வல்வினை இட்ட வித்தி
னெதிர்ந்துவந் தெய்தி" (சிலப்:10:171,172)

...ற வரிகளில் விதை என்பது வித்து என்ற சொல்லாற் ...ங்கப்பட்டுள்ளது. பயிரினம் தோன்றுவதற்கு விதை ...ன்மையானது.

விதை எப்படி முக்கியமோ அதுபோன்று விவசாயம் எவ்வளவு ...க்கியம் என்பதனை வள்ளுவர் கூறியுள்ளார்

திருவள்ளுவர் 'உழவு' (அதிகாரம் 104) என்னும் அதிகாரத்தில், உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்று கூறி, உலகிற்கே அச்சாணியாக விளங்கும் விவசாயத்தின் மேன்மையை வலியுறுத்தி யுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் தானியப்பயிர் வகைகள்:

பண்டைத் தமிழரின் வாழ்வியல் சூழலோடு இயைந்தமைந்த வேளாண்மைக் காலத்தை ஆய்வாளர்களாலும் அறுதியிட்டுக் கூற இயலாது. தமிழர் தாம் வாழும்நிலங்களைத் திணை மண்டலங்களாகப் பகுத்து இலக்கண வரையறை செய்திருந்தனர்.

தானியம் என்ற சொல்லாடல் பிற்காலத்திற் தோன்றியது. பழந்தமிழர் தானியங்களைக் கூலம், தவசம் போன்ற சொற்களால் குறிப்பிட்டமையைப் பின்வரும் வரிகள் எடுத்தியம்புகின்றன.

"கூலங் குவித்த கூல வீதியும்" (சிலப்:5:23)

"கூல மறுகிற் கொடியெடுத்து நுவலும்" (சிலப்:6:132)

"கூலங் குவித்த கூல வீதியும்" (சிலப்:14:211)

"கூல மறுகுங் கொடித்தேர் வீதியும்க" (சிலப்:22:109)

கூலமாவன ஈரெண்வகை என்று அடியார்க்கு நல்லார் தம் உரையில் நெல்லு, புல்லு, வரகு, இராகியென் கூலம் எனவும் எள்ளுக் கொள்ளுப் பயறுழுந்தவரை, கடலை, துவரை, மொச்சை யென்றாங், ...டினை முதிரை கூலத் துணவே" என உணவாகப் பயன்படும் கூலவகை பதினாறாகக் குறிப்பிடுகிறார். இதனை ந.மு. வேங்கடசாமி உரையில் விரிவாகப் பதினாறு வகைக் கூலத்தை நெல்லுப் புல்லு வரகு, தினை, சாமை, இறுங்கு தோரை இராகி எண்கூலம் எனவும், எள்ளுக் கொள்ளுப் பயறுழுந்தவரை, கடலை, துவரை, மொச்சை

AIScanner

குதிரைவாலி (புல்லுச்சாமை) புன்செய் பயிர் நார்ச்சத்து, மாவு கொழுப்பு, சுண்ணாம்பு, பாஸ்பரஸ், இரும்புச்சத்து உள்ளது. 90 நாட்களில் அறுவடைக்குத் தயாராகிவிடும் இந்தியா மட்டுமன்றி பாகிஸ்தான், நேபாளம் போன்ற நாடுகளிலும் பயிரிடப்படுகின்றது இதன் அரிசியை வேகவைத்தும் நீரில் ஊறவைத்தும் உண்ணும் பழக்கம் உண்டு. இதனை நீரில் நன்கு ஊறவைத்த பின் பயிர் செய்கின்றனர்

இறுங்கு கருஞ்சோளம்

சோள இனங்கள் முப்பது வகையானவை. இலங்கையில் இறுக்கு என வழங்கப்படுகிறது.உணவிற்கு மட்டுமின்றி கால்நடைத் தீவனத்திற்காகவும் பயிரிடப்படுகிறது. சில வகை மேய்ச்சல் நிலங்களில் இயற்கையாக வளர்கின்றன. அரிசி கோதுமைக்கு அடுத்த நிலையில் சோளம் உணவிற்காகப் பயிரிடப்படுகிறது. மிதமான வெப்பம் கொண்ட பகுதிகளில் பயிராகின்றன.வெள்ளைச் சோளம் அரிசியைப் போன்ற தன்மையையும் அதைவிடப் பலசத்துக்களையும் கொண்ட உணவுப் பொருள் ஆகும். இவ்வகைத் தானியங்களில் குறைந்த அளவே சர்க்கரை இருப்பதால் இவை நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்றது.

ஆண்டுக்கு ஒருமுறை ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்வர். மானாவாரி நிலங்களில் சித்திரை மாதம் ஒரு உழவு செய்து மண்ணை ஆறப்போடுவர். ஆடி மாதத்தில் ஒரு மழை பெய்தவுடன் சோளத்தை விதைத்து, நிலத்தை உழவு செய்ய வேண்டும். சோள விளைச்சலைப் பொறுத்து, மார்கழி மாதக் இறுதிக்குள் அறுவடை செய்து விடுவர். நன்றாக விளைந்த சோளம் முற்றி, சிறிய அளவில் வெடித்து அரிசிவெள்ளையாக வெளியே தெரியும்போது அறுவடைசெய்வர். சோளம் உயிரி எரி பொருள் தயாரிப்பிற்கும் பயன்படும் முக்கியப் பொருளாகும்.

கேழ்வரகு

கேழ்வரகு என்பது இலங்கை வழக்கு. குரக்கன் finger millet ஆண்டுக்கொருமுறை விளையும், வேறு பெயர்கள் ஆரியம், இராகி, கேப்பை ஆகும். கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் கேழ்வரகு சாகுபடியில் முதன்மை வகிக்கின்றன.

சேதமடைந்த திசுக்களைச் சரி செய்யும் உடலில் நைட்ரசன் நிலையைச் சமன்படுத்தும் உடல் எடையைக் கட்டுப்பாட்டில் வைக்கும். கால்சியம் நிறைந்த உணவாக இருப்பதால் எலும்பைப் பலப்படுத்தும், கல்லீரலில் தேங்கும் கொழுப்பை வெளியேற்றும்.

AIScanner

...ங்களுள் அவரை, துவரை, எள்ளு போன்றவற்றையும் ...கூலம் என்று வழங்கினர் பழந்தமிழர். நெல்லும் தானிய ...வகைப்படுத்தி வைத்திருந்தமையை உணரமுடிகிறது.

...ம் கொடியும்:

...வரங்கள் தம் வளர்ச்சிக்குத் தேவையான சத்துகளை நிலம், ...று, சூரியனிலிருந்து பெற்றுக்கொள்கின்றன. தாவரம் தம் ... உணவைச் சேமிக்கிறது. வேரில் சேமித்த உணவைக் கிழங்கு, ...யம் போன்ற வகைகளில் பெறஇயலும்.மலைவாழ் மக்களின் ...ான உணவு வேர்களினின்று பெறப்பட்டவையாகும். கிழங்கு ... உணவில் இஞ்சி மஞ்சள். காயம் போன்றன இயற்கை ...வத்துறையில் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. மகளிர் அலங்காரப் பொருளாக மஞ்சளை இட்டுக் கொள்கின்றனர்.

...ளியல்பு அடிப்படையிலான தாவரங்களின் இரண்டாவது ...யைக் குறிக்கும் 'கொடி' என்ற சொல்லும் மிகப் பழமையானது. ...ட மொழிக் குடும்பத்தில் இச்சொல் திரிந்தோ திரியாமலோ ...ர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. புன்கொடி (மலை: ...) மென்கொடி (குறு 186) நுண்கொடி (அகம்: 237) ஆகியவை ...லிய தண்டுடைய செடிவகைக் கொடிகளைக் (herbaceous ...mbers) குறிக்கின்றன.பருஉக்கொடி என்ற சொற்றொடர் மரவகைத் ...த கொடிகளைக் (lianes:woodyclimbers) குறிப்பிடுகிறது. நிற ...ப்படையில் வெண்கொடி (ஐங்:456) கருங்கொடி (மலை:521) ...கொடி (ஐங்:25) பசுங்கொடி போன்றவைகளும் அறியப் ...டுள்ளன. அடர்ந்து நெருக்கமாக வளரும்கொடியைப் பவர் ...ற சொல் சுட்டும். பூக்களின் வகைப்பாட்டில் கொடிப்பூ சங்க ...க்கியத்தில் இடம் குறிப்பிடத்தக்கது. ஐங்குறு நூற்றில் மட்டும் ...ட்டவும், கொடியவும் பூப்பல பழுனி (ஐங்:414) என்ற வரி ...டிப்பூவைச் சுட்டுகிறது. பெறவில்லை என்பது கொடிவகைத் ...வரங்களில் கிடைக்கும் பலன்கள் மிகுதியானவை. எளியமுறையில் ...பாட்டிற்கு எடுத்துக்கொள்ள இயலும் .மணப்பொருட்களான ...ளகு, ஏலமும் கொடிவகைத் தாவரத்தில் கிடைப்பன.

கண்ணகி கோவலன் மதுரைப் பயண வழி குறித்த பார்வையை ... மறையோன் வழி இளங்கோ முன் வைக்கிறார். வலப்புறவழியில் ...ங்குகள் தம் உணவான கிழங்குகளை அகழ்ந்தெடுத்த குழிகளுள் ... மலர்கள் வீழ்ந்து மறைந்திருக்கும். எனவே பாதை குறித்து ...ான அனுமானஞ் செய்யவியலாது குழிகளில் கால் பதிக்க ...டும் என உரைக்கிறார். வள்ளிக்கிழங்கு நிலத்தைப் பிளந்து ...க்கடியில் பரவியிருக்கின்ற செய்தியை உணர்த்துகிறார்.

"மண்பக விழ்ந்த கிழங்ககழ் குழியைச்" (சிலப்:10:68)

"மஞ்சளு மிஞ்சியு மயங்கரில் வயலத்துச்" (சிலப்:10:74)

"காயமு மஞ்சளு மாய்கொடிக் கவலையும்" (சிலப்:11:82)

"கால மன்றியுங் கருங்கறி மூடையொடு" (சிலப்:14:210)

"ஏல வல்லியு மிருங்கறி வல்லியும்" (சிலப்:25:41)

முடிவுரை

சிலப்பதிகாரம் ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர் வரையிலான இயற்கைப் பருப்பொருட்களை தொல்காப்பிய மரபியல் வரையறைக்கு உட்பட்டுப் பகுத்துரைக்கின்றது.

அகக்காழ். புறக்காழ் உடைய ஓரறிவுயிரினங்கள் நிலவியல் வகைப்பாடுகளான திணை நிலங்களின் கருப்பொருட்களில் முதன்மையிடம் வகிக்கின்றன.

பூவாது காய்க்கும் பலா எனத் தாவர இனங்களை அறிமுகப் படுத்துகிறார் இளங்கோவடிகள். பல்வேறு தானிய வகைகள் மக்கள் பயன்பாட்டில் இருந்ததைக் கூலக்கடை, புலப்படுகிறது. முப்பத்திரண்டு வகை மூலிகைகள் மகளிர் பயன்பாட்டில் கூந்தற் பராமரிப்பிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மணப்பொருள் சார்ந்த தாவரங்கள் மக்கள் பயன்பாட்டிற்கெனப் பெறப்பட்டன.

மலர், காய், கனி போன்ற தாவரப்பொருட்கள் மக்கள் நுகர்வுப் பண்டங்களாயின. வழிபாட்டிலும், அலங்காரத்திலும் பஞ் சனையிலும் மலர்கள் இருந்தது புலனாகிறது.

மாதவி மலர்களைக்கொண்டு மடல் புனை தொடர்பு வரலாற்றில் அறிமுகப்படுத்தியுள்ளாள். இப்படி திருக்குறளில் சிலப்பதிகாரத்தின் கூறியது போன்ற விவசாயத்தையும் என்னை மிக அழகாகவும் விரிவாகவும் கூறப்பட்டுள்ளதை நம்மால் காண முடிகின்றது.

துணை நூற்பட்டியல்

1. கு.வி கிருஷ்ணமூர்த்தி தமிழரும் தாவரமும்
2. உ.வே.சா (ப.ஆ). சிலப்பதிகாரம் மூலமும் உரையும்
3. ந.மு வேங்கடசாமி (ப.ஆ) நாட்டார்
4. அ.அருள்சீலி (ப.ஆ) எட்டுத்தொகையில் இயற்கை வளம்

AIScanner

நூல் விளக்கக் குறிப்பு

தலைப்பு	: வள்ளுவ இலக்கண கண்ணாடியின் வழி கம்பனும் இளங்கோவும் (ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு நூல்)
பதிப்பாசிரியர்கள்	: பேரா முனைவர் ச.திருநாவுக்கரசு பேரா முனைவர் க.ஞானஜோதி சரவணன்
தொகுப்பாசிரியர்கள்	: முனைவர் அ.சதீஷ் கேப்டன் புரவலர் முனைவர் பா.வேலம்மாள்
பதிப்பு	: முதற்பதிப்பு, 2026
உரிமை - வெளியீடு	: கம்பன் கழகம் அறக்கட்டளை, திண்டிவனம்
பொருள்	: இலக்கியம்
தாள்	: மேப்லித்தோ வெள்ளை
அளவு	: டெம்மி
எழுத்து	: 12 புள்ளி
பக்கங்கள்	: xvi + 248 = 264
படிகள்	: 100
கணிப்பொறி அச்சு அச்சிட்டோர்	: ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், மதுரை - 625 020. செல்: 98422 93915
பதிப்பகம்	: Kamban Book of World Records 97896 94125
விலை	: ரூ.300/-

ISBN: 978-81-965213-6-3